# தலாவ பிரதேச சபை
# அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 26 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 18 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தலாவ பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | |
|---|---|---|---|---|
| | | வருமானம் | செலவினம் | சொத்துக்கள் |
| | | ரூபா. 000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 02 | - | - | 2,704 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | - மேற்படி - | 01 | 243 | - | - |
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | 67 | - | - |
| | - மேற்படி - | 03 | - | - | 361 |
| (இ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபாடுகள் | 06 | - | - | 333 |
| | - மேற்படி - | 01 | - | 1,252 | - |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 04 | - | - | 905 |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் ரூபா 1,078,098 ஆக இருந்ததுடன் பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அம்மீதிகள் ரூபா 1,178,608 ஆக இருந்தது.

### 1.3.3 தெளிவுபடுத்தப்படாத வித்தியாசங்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2 கணக்கு விடயங்களின் பிரதான பேரேட்டின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 88,694,325 ஆக இருந்ததுடன் பரிட்சை மீதிகளின் பிரகாரம் அம்மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 74,020,879 ஆனமையால் ரூபா 14,673,446 ஆன வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்படவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 4,554,687 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பனவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் அதிகாரச் சட்டத்தின் 153 மற்றும் 154 ஆம் பிரிவுகள் | ஒவ்வொரு நிறுவனமும் மாதாந்தம் ரூபா 50,000 இற்கு மேற்பட்ட சேவை வழங்கல் அல்லது நிர்மாணங்களின் போது குறிப்பிட்ட கட்டணங்களின் அடிப்படையில் நிறுத்தி வைத்தல் வரி 5% அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது நிறுத்தி வைத்தல் வரி அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 570,571 | காலம் கடந்த வைப்புக்கள் வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 12,241,626 ஆன காலம் கடந்த வைப்புக்கள் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ) வடமத்திய மாகாண நிதி விதி** | |
| (i) மாகாண நிதிவிதி 261.2.2 | ஒரு தடவையில் செயல் நிமித்த உப கட்டு நிதி வழங்கக்கூடிய உயர் எல்லை ரூபா 100,000 ஆக இருந்த போதிலும் 05 சந்தர்ப்பங்களில் ரூபா 950,000 தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தன. |
| (ii) 546 , 553 | சபையின் செயலாளர் மற்றும் காசுப் பொறுப்பாளர்களிடமிருந்து பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,378,962 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,144,179 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 2,531 | 1,211 | 1,320 | 3,000 | 2,555 | 5,327 |
| (ஆ) | வாடகை | 3,765 | 3,757 | 08 | 7,100 | 7,080 | 2,146 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,045 | 605 | 440 | 3,700 | 3,660 | 120 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 9,267 | 619 | 8,648 | 26,200 | 25,825 | 8,594 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 6,878,794 தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 வருமான அறவீட்டிலுள்ள பலவீனங்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 152 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் தனியார் ஊக்குவிப்பு வகுப்புக்கள் மற்றும் சட்ட சேவை நிறுவனங்களிலிருந்தும் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் மூலதன நிலப் பெறுமானத்திலிருந்தும் வரியினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறான | முரண் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 24,011 | 18,482 | 5,529 | 18,000 | 17,209 | 791 |
| ஏனையவை | 9,976 | 10,329 | (353) | 13,800 | 13,767 | 33 |
| உப மொத்தம் | 33,987 | 28,811 | 5,176 | 31,800 | 30,976 | 824 |
| மூலதனச் செலவினம் | 9,360 | 19,742 | (10,382) | 65,000 | 68,528 | (3,528) |
| மொத்தம் | 43,347 | 48,553 | (5,206) | 96,800 | 99,504 | (2,704) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (அ) | பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| (ஆ) | இரண்டாம் தரங்கள் | 08 | 07 |
| (இ) | ஆரம்ப தரங்கள் | 39 | 33 |
| | மொத்தம் | 48 | 41 |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

வட மத்திய மாகாண பிரதம அமைச்சினால் அரிசி மாவுடன் அண்மித்த பேக்கரி உற்பத்தித் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 814,000 ஆன உபகரணங்கள் சபைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் 2011 யூலை 04 கணக்காய்வு திகதி வரையிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையினால் அவ் உபகரணங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5.2 அறவிட வேண்டியுள்ள பதவியினர் கடன்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,419,630 ஆக இருந்ததுடன் 01 வருடகாலத்தை விஞ்சிய அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 114,609 ஆக இருந்தது.

### 2.5.3 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அசைவற்றுக் காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 45,550 ஆக இருந்தது.

### 2.5.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 76,409,832 ஆக இருந்தது.

### 2.6 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

தாபன விதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 2.1 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள், அமைச்சுச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் கீழ் மேற்பார்வையில்லாத வெளிநாட்டு கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கு பற்றுவதற்காக தலைவருக்கு 2010 செப்தெம்பர் 06 ஆந் திகதிய 1353 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 150,000 செலுத்தப்பட்டிருந்தது. சகல அமைச்சுச் செயலாளருக்கும் விடுக்கப்பட்ட 2006 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஎஸ்ஏ/1/1//2006 ஆம் இலக்க சனாதிபதியின் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அச்சுற்றுப் பயணம் அரசாங்கத்திற்கு அல்லது பிரதேச சபைக்கு பிரதிபலன் கிடைக்கக் கூடிய சுற்றுப்பரமாணம் என உறுதிப்படுத்தப்படவில்லை.

### 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(i) வடமத்திய மாகாண பிரதம செயலாளரின் 2003 செப்தெம்பர் 17 ஆந் திகதிய என்சீபீ/சீஎஸ்/பீரீ/04 ஆம் இலக்க மாகாணத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மகநெகும மற்றும் கமநெகும செயற்திட்டங்களில் நிருவாகச் செலவினத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளிலிருந்து செலுத்த முடியுமான மேலதிக நேரம், பிரயாணச் செலவுகள் நாட்சம்பளம் மாத்திரமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக 2010 மார்ச் 10 ஆந் திகதிய 319 மற்றும் 320 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 123,575 தொகை தலைவர் உட்பட பதவியினர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) சபைக்குரிய ரூபா 13,950,000 பெறுமதியான மோட்டார் கிரேடரொன்றும் ரூபா 4,473,500 பெறுமதியான 02 டிபர் இயந்திரங்களும் காணப்பட்ட வேளையில் வெளியிலிருந்து வாடகை அடிப்படையில் சபையின் அங்கீகாரமின்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி நடைமுறைகளுக்குப் புறம்பாக முறையான ஒப்பந்தம் இன்றி இயற்திர சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காக தனியார் கம்பனி ஒன்றிற்கு 2010 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 375 மற்றும் 556 இன் மூலம் ரூபா 350,000 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2010 திசெம்பர் 31 வரையிலும் உரிய செயற்பாடுகள் பூர்த்தியடைந்தமையை உறுதிப்படுத்துவதற்கான பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் மக்களின் வசதிக்காக நலன்புரி நடவடிக்கைகளுக்குரிய நடவடிக்கைகள் மற்றும் சுகாதாரம், பொது வீதிகள் பொதுப் பயன்பாடு சேவைகளுக்குரிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டமொன்றையும் அத்திட்டத்தினை மீளாய்வாண்டில் அமுல்படுத்தபடுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

### நிர்மாணங்கள்

(அ) மீளாய்வாண்டினுள் 06 வேலைகளுக்காக மாகாண பெறியிலாளரின் நிலைமைக் கட்டுப்பாட்டு அறிக்கை பெறப்படாமல் ரூபா 1,561,999 செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் எப்பாவெல போஸ்பேட் வீதிக்கு கல் இட்டு தார் இடுதல் செயற்திட்டடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக 2010 ஏப்ரல் 07 ஆந் திகதிய 438 ஆம் இலக்க கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் ரூபா 275,360 ஆனது ஒப்பந்தகாரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மதிப்பீடு அல்லது

சேவையின் இறுதி அறிக்கை மற்றும் பதில் கடமை வழங்கல் தொடர்பான அறிக்கையொன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்தக் கட்டுப்பாடு
(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு